தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.maveerarnaal.ch / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2020

**11 வயதுப்பிரிவு**
(01.01.2009 – 31.12.2009 வரையில் பிறந்தோர்)

## வல்லமைமிகு தலைவர்

காலமும், வரலாறும் எமக்களித்த ‘‘புதையலே’’ எங்கள் தமிழீழத் தேசியத் தலைவர் மாமா. அவர் பெயர் கேட்டால் கருவில் இருக்கும் குழந்தைக்கும் வல்லமை பிறக்கும். பிரபாகரன் என்பது ஒரு பெயர் மட்டுமல்ல, ஓர் இனத்தின் அடையாளம். அப்பெயர் தமிழ் இனத்தை மட்டுமன்றி நெடுங்காலமாக அடிமையாய் வாழ்ந்த இனங்களையெல்லாம் விடுதலைக்காய் போராடத் தட்டியெழுப்புகின்ற போர்ப்பறை.

வேலுப்பிள்ளை தாத்தாவும் பார்வதி பாட்டியும் கருவிருத்தி எமக்களித்த தாய்மாமன். தமிழீழத்தில் நான் தொட்டில் கட்டி ஆடுவதற்காய் பகைவிரட்டப் படைதிரட்டிய பெருவீரன் என் மாமா.

மாறாத கொள்கையும் மறையாத பற்றுறுதியும் கொண்டு, எண்ணம், சொல், செயல் அனைத்திலும் இனமானம் ஒன்றே தன் மூச்சென்பவர் அவர். இயற்கையை நண்பனாகவும் வரலாற்றை வழிகாட்டியாகவும் கொண்ட உன்னத தலைவர்.

தனிமனித ஒழுக்கம், அன்பு, அரவணைப்பு, வல்லமைமிகு வழிநடத்தல், போர் அறம் காக்கும் மாண்பு, தன்னலம் இல்லாத அர்ப்பணிப்பு என்பவற்றை உலகில் ஒரேயொருவரில் பார்க்கமுடியும் என்றால், அந்த ஒப்பற்றவர் எங்கள் தலைவர் மாமாவே என்று உறுதியுடன் கூறுவேன்.

> ‘‘அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்
> எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு’’

என்றார் திருவள்ளுவர். அவர் கூறிய அத்தனை சிறப்பையும் கொண்டிருப்பவர் எங்கள் தலைவர் மாமா. ஆயிரமாயிரமாய் அணிதிரண்டு நின்ற தமிழீழத் தரைப்படை, கடற்படை, வான்படை, கரும்புலிப்படையோடு, வல்லரசு நாடுகளை எல்லாம் வாய்பிளக்க வைத்த தமிழீழ உட்கட்டுமாணமும் எங்கள் தலைவர் மாமாவின் ஆளுமையின் சான்றுகளே!

எங்கள் மாமா காட்டுகின்ற வழி அறத்தின் பாற்பட்டது. அடிமை வாழ்வை அடியோடு அறுத்தெறியும் வல்லமை மிக்கது. எம்மை எமக்கு இனங்காட்டி, எம் இனத்திற்காய் வாழ்கின்ற பண்பை வளர்ப்பது. எத்தடைவரினும் அத்தடை உடைத்து எங்கள் இலக்கை அடைகின்ற வல்லமையை எமக்குத் தந்து நிற்கிறார் எங்கள் தலைவர் மாமா.

அவரின் தமிழீழ இலட்சிய ஒளிவீசும் விழிகளும் சுட்டுவிரல் காட்டும் வழிகளும் தமிழீழத்தனியரசை எமக்குப் பெற்றுத்தரும். எங்கள் தலைவர் மாமாவின் வழிகாட்டல் எம்மை வழிநடத்த உறுதியுடன் பயணிப்போம்.

நன்றி,
வணக்கம்.